1979 ஏப்ரல் 27] [பேரவைத் தலைவர்]

மிகக் கடுமையாக எச்சரிக்கிறேன். மீண்டும் ஒரு முறை இம் மாதிரி ஏற்படுமானால் அப்பத்திரிகை மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொண்டு, இங்கு எழுப்பப்பட்ட மேலே குறிப்பிட்ட அவை உரிமை மீறல் பிரச்சனைகள் மீது மேல் நடவடிக்கைகள் இல்லாமல் இத்துடன் முடிக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. திருப்பூர் மணிமாறன் அவர்கள் 19–4–1979 அன்று பேரவையில் ''மக்கள் செய்தி'' மற்றும் ''மாலை முரசு'' நாளேடுகள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார். காவல் துறை, மற்றும் தீயணைப்பு பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகள் பேரவையில் 18–4–79 அன்று எடுக்கப்பட்டிருக்க, 17–4–79-ந் தேதியே எடுக்கப்பட்டதாக அப்பத்திரிகைகள் பிரசுரித்தது அவை உரிமை மீறிய செயலாகும் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அப்பத்திரிகைகளிடம் விளக்கம் கேட்டுப் பின்னர் என் தீர்ப்பை அளிப்பதாக நான் தெரிவித்தேன்.

மக்கள் செய்தி நாளேட்டின் ஆசிரியர் தம் விளக்கத்தில் ''வழக்கம் போல நிகழ்ச்சி நிரலின்படி போலீஸ் துறை விவரக் குறிப்பு தாக்கல் செய்யப்பட்டு விடும் என்ற நம்பிக்கையில் அதிலிருந்த முதல்வரின் அறிவிப்புகளை பிரசுரித்தோம். துரதிர்ஷ்டவசமாக அன்றைய நிகழ்ச்சி நிரலில் போலீஸ் துறை மானியம் இடம் பெற வாய்ப்பில்லாது போய் விட்டது. சட்டசபையை அவமதிக்கும் நோக்கத்துடனோ களங்கம் கற்பிக்கும் நோக்கத்துடனோ நாங்கள் அந்தச் செய்தியை பிரசுரிக்கவில்லை. எதிர்பாராத வகையில் நேர்ந்து விட்ட இந்தத் தவறுதலுக்காக எங்கள் வருத்தத்தை தெரிவித்துக் கொண்டு, இனி அம்மாதிரி நேராது பார்த்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்று கூறியுள்ளார்.

தவறுதலுக்கு வருத்தம் தெரிவித்துள்ளதால், அதை ஏற்றுகொண்டு, மேல் நடவடிக்கை ஏதும் இல்லாமல், இனிமேல் இவ்விதம் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற எச்சரிக்கையுடன் இப்பத்திரிக்கை மீதான பிரச்சனையைமுடித்து விடலாம் என்று தெரிவிக்கிறேன்.

(ஆ) மாலை முரசு நாளிதழ் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''மாலை முரசு'' நாளேடு, இருமுறை கடிதம் அனுப்பியும், விளக்கம் அளிக்காமல், தவணைக் கேட்டுக் கடிதம் அனுப்பியுள்ளது. எனவே, ''மாலை முரசு'' நாளேட்டைப் பொறுத்த வரையில் எழுப்பப்பட்ட பிரச்சனையில் முடிவெடுக்க வேண்டியுள்ளது. பேரவையில் நடை

பெறாத நிகழ்ச்சியை நடந்ததாக வெளியிட்டுள்ளதால், அப் பிரச்சனையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்குமிடத்து அவை உரிமை மீறல் நிகழ்ந்துள்ளது என்று தீர்ப்பளிக்கிறேன், திரு. துரை கோவிந்தராசன்.

திரு. ரா. உமாநாத் : சில கிளாரிஃபிகேஷன்ஸ் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைகோவிந்தராசன், இதை பிரிவிலெஜ் கமிட்டிக்கு அனுப்புவதற்கான தீர்மானம் கொண்டு வருவார். அதன் பிறகு நீங்கள் கேளுங்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் மேலெழுந்தவாரியாகப் பார்த்து அவை உரிமை மீறல் எழுந்திருப்பதாகத் தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். எனவே, பேரவை 189-வது விதியின் கீழ் இப்பிரச்சனையை அவை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

திரு. ரா. உமாநாத் : ஒரு நீண்ட தீர்ப்பை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அது புரிவதற்கே கஷ்டமாக இருக்கிறது. அதனாலே ஆன் தி பேஸ் ஆப் இட் ஒரு இரண்டு மூன்று விஷயங்களில் எனக்கு தெளிவு வேண்டும் என்று இதை கேட்கிறேனே தவிர உங்கள் தீர்ப்பின் மீது காமெண்ட்சோ, கிரிட்டிசிசமோ செய்ய வில்லை.

ஒரு விஷயம் நீங்கள் குறிப்பிட்டது, சில நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அதில் உபயோகப்படுத்த கூடிய வார்த்தைகளை எக்ஸ்பன்ஜ் பண்ணப்பட்டால் அதை விட்டு நிகழ்ச்சிகளை விவரிக்கிறது என்பது சரியாகாது என்று சொன்ன மாதிரி எனக்கு காதில் விழுந்தது. அப்படியானால் ஒரு வாக் அவுட் நடைபெறுகிறபோது சில வார்த்தைகள், கோஷங்கள் கொடுக்கிறார்கள். அன்றைக்கு கூட நீங்கள் ரூலிங் கொடுத்தீர்கள். கோஷங்கள் இருக்கக் கூடாது என்று. அப்படி ஒரு நிகழ்ச்சியிலிருந்து பிறக்கும் வார்த்தைகள் இருக்கக் கூடாது என்றால் அந்த நிகழ்ச்சியும் இருக்கக் கூடாது என்று ஆகிறது. கோஷங்கள் இருக்கக்கூடாது என்றால் வாக்அவுட்டும் இருக்க கூடாது, அதையும் ரெபர் பண்ணக் கூடாது என்று வரும். சில டைம்லே வார்த்தைகளை எக்ஸ்பன்ஜ் பண்ணுகிறார்கள். அதனால் கடுமையான வாக்குவாதம் என்று பத்திரிகையில் வருகிறது, ஜனங்களுக்கு அப்படி ஒரு கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது என்பது புரிகிறது, அது உதவிகரமனது தான்.

1979 ஏப்ரல் 27] [திரு. ரா. உமாநாத்]

ஆனால் அதற்கும் இடம் இல்லாமல் போய்விடுமே அதிலே என்று தான் ஒரு கிளாரிபிகேஷன், அதிலே எனக்கு விளக்கம் வேண்டும்.

இரண்டாவது, நடவடிக்கை குறிப்பில் இல்லாததை போடக் கூடாது என்று சொல்கிறீர்கள். நடவடிக்கை குறிப்பு என்பது வெறும் ஸ்பீச்சுதான். ஸ்பீச்சைப் பொறுத்த வரைக்கும்தான் மெயின். ரிப்போர்ட்டர்ஸ் எழுதுகிற போது நீங்கள் அங்கே வைக்க வைத்திருக்கிறீர்கள். ஆனால் சபையில் நடக்கக்கூடிய விஷயங்களை பொறுத்த வரைக்கும் பேசியதைப் பொறுத்த வரைக்கும் நடவடிக்கைக் குறிப்பில் இருக்க வேண்டும். அவர் அதைப் பண்ணினார், எழுந்து நின்றார், ஒரு உறுப்பினர் குதித்தார் என்பது போன்ற "Action of the Member or the conduct of the Member normally does not find a place in the record. Only their speeches or intervention or your rulings

அந்தமாதிரி ஒரல் விஷயங்கள் தான் போடப்பட்டிருக்கும். அதிகமாகப் போனால், பிராக்கட்டில் இண்டர் பிரட்டேஷன் என்று போடுவார்கள். பத்திரிகைகளுக்கு இங்கே நாம் பார்த்து எழுத வசதி செய்து கொடுத்திருக்கிறோம். அப்படி கொடுத்திருக்கிறபோது அவர்கள் பார்த்ததை எழுதக்கூடாது என்று சொல்கிறீர்களே அதிலே எனக்கு கிளாரிபிகேஷன் வேண்டும்.

மூன்றாவது பைனல் பாயின்ட் என்னவென்று சொன்னால் ரிப்போர்ட்டிங் பொறுத்த வரைக்கும் பிரஸ்ஸுக்கு அதிகமாக freedom உண்டு.

Now it is on par with the Press in parliament

இரண்டுக்கும் சமமான உரிமை இருக்கிறது. உங்களுடைய ரூலிங் பார்லிமெண்டில் இருக்கக்கூடிய சுதந்திரத்திற்கு அதிலிருந்து குறைக்கக்கூடிய நிலையில், இறங்குவதாக இருக்கிறது. இரண்டும் பாராக இருக்கும் போது இது எப்படி என்று எனக்கு கிளாரிபிகேஷன் தேவை இந்த மூன்று பாயிண்டுகளுக்கும் எனக்கு கிளாரிபிகேஷன் தேவை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொன்னது அதற்குக் காரணமான நிகழ்ச்சிகள் அத்துடன் உட்கார்ந்து கொண்டே பேசுகிற போது, அல்லது தவறுதலாக, சூடான வார்த்தைகளை சொல்வது பேசிக்கொண்டே வருகிறபோது பேச்சுக்களிலே ஒன்றை நீக்கவேண்டும் என்பதையும், நீக்கக்கூடாது என்பதையும் சொல்லுகின்ற தீர்ப்பின் அடிப்படையிலே தான் அவர்கள் போடுவது. அதை ஒட்டிய நிகழ்ச்சிகள் இருக்கும் . நிகழ்ச்சிகள் என்று சொன்னால், அப்படி சொல்லுகிறபோது உட்கார்ந்துக் கொண்டே ஒரு உறுப்பினர் தவறான ஒரு வார்த்தையைப் பேசுகிறார். இங்கே

இருந்துக் கொண்டே கைத்தட்டுகிறார்கள், இங்கே இருந்து கோஷம் போடுகிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள்தான் அதிலே இடம் பெறக் கூடாது. அதுதான் காரணமான நிகழ்ச்சிகளே தவிர, நீங்கள் பேசுவதிலே குறிப்பிட்ட நியாயமான நிகழ்ச்சிகள் எல்லாம் இடம் பெறும். மற்றவைகள் இருக்கிற பிரச்சனைகளுக்கு அதிலே எந்தவித மாற்றமும் இல்லை, இதில் உள்நோக்கமோ, கருத்தோ இல்லை என்பதும்,

இரண்டாவதாக சொன்னீர்கள் கோஷங்கள் என்று, நீங்கள் வாக் அவுட் செய்வது இடம் பெறும், வாக் ஆவுட் செயகிறபோது இங்கே நான் நினைவு படுத்துவதற்காக சொல்கிறேன். சொல்லி விட்ட பிறகு அதை நீக்கிவிடச் சொல்லி உத்தரவிடுகிறேன்.

" * * * * * *

என்று சொல்லுகிற வார்த்தைகள் இடம் பெறக் கூடாது என்று சொன்னேன். நான் இப்படிச் சொன்னதை நீக்கிவிட வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

(திரு. உயாநிாத் குறுக்கீடு)

உதாரணத்திற்காக நான் அதைச் சொன்னேன். அதைத் தான் எடுத்துவிடச் சொல்லிவிட்டேனே!

மூன்றாவது, பாராளுமன்றத்திலே பிரஸ்ஸுக்கு என்று விதிகளை விதித்திருக்கிறார்கள். நமக்கு இல்லை. இரண்டாவது இதே நம்முடைய பேரவை பிரிவிலெஜ் கமிட்டிக்கு பிரஸ்ஸுக்கு கைட் லைன்ஸ் தரவேண்டும் என்று, சிபாரிசு செய்திருக்கிறது. அதனால் நான் பத்திரிகைகளைத் தவறாகச் சொல்லவில்லை. சில பத்திரிகைகள் போட்டுவிட்டு பிறகு வருத்தம் தெரிவிக்கிறார்கள். 2, 3 தடவைகள் இந்த நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. அதனாலே அவர்கள் எப்படி எப்படி கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர பத்திரிகைகளுடைய உரிமையையோ அவர்களுடைய சுதந்திரத்தையோ நான் பறிக்க தயாராக இல்லை என்பதைக்குறிப்பிட்டு, அப்படியும் நாம் இரண்டாண்டு காலமாக நாம் எவ்வளவு பெருந்தன்மையாக நடந்து கொண்டோம். அத்துணைக்கும் அவர்களுக்குத் தீர்ப்பை அனுகூலமாக அளித்திருக்கிறோமே தவிர, இன்றைக்கு மூன்று முறைகள் மாலை முரசு பத்திரிகைக்கு எழுதி அனுப்பியும் கூட வேண்டுமென்றே காலம்

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப் பெற்றது.

1979 ஏப்ரல் 27]

கடத்துவதாக எண்ணம் இருக்கிறது என்று நாம் தெரிந்துக் கொண்டதினால் தான் உரிமைக்குழுவிற்கு அனுப்பினோமே தவிர இரண்டு ஆண்டுகளில் நாம் எதையுமே அனுப்பியதில்லை. இப்படிப்பட்ட ஐயப்பாடு உள்ள பிரச்சினைகளை நாம் அனுப்பியதே இல்லை. அதனாலே பொதுப்படையாகக் கொடுக்கப்பட்ட உறுப்பினர் அவர்களுடைய அவை உரிமை மீறல் பிரச்னையை விளக்கமாகச் சொல்லி பத்திரிகைகள் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னேனே தவிர வேறு எந்தவித நோக்கமும் இல்லை.

[முற்பகல் 10–10]

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நான் ஒன்றும் இதை நீடிக்க விரும்பவில்லை. நடவடிக்கைக் குறிப்பில் இல்லாதவைகள் என்கிறபோது பற்ற பல கான்டக்ட்ஸ் அதில் இடம் பெறாது. வெளிநடப்பு நடவடிக்கைக்குறிப்பில் கட்டாயமாக இருக்கும். What they observe in the House அது போடக்கூடாது என்று அர்த்தம் வரக்கூடாது.

இரண்டாவதாக, பார்லிமெண்டைப் பொறுத்த வரையில் நான் சொன்னேன். முன்பு அவர்கள் பெர்ரோஸ் காந்தி ஆக்ட் பாஸ் செய்து இருந்தார்கள். அதில் சில கோட் பிக்ஸ் செய்து இருந்த நிலைமை மாற்றப்பட்டு விட்டது. இப்போது கான்ஸ்டிடியூஷனல் அமென்ட்மென்ட் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த கான்ஸ்டிடியூஷன் அமென்ட்மென்ட்படி ப்ரோசீடிங்ஸ் பப்ளிகேஷன் சம்பந்தமாக ப்ரொடக்ஷன் ப்ரஸ்ஸுக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த கான்ஸ்டிடியூஷன் அமென்ட்மென்ட் வருவதற்கு முன்பு அந்தந்த மாநிலங்களில் சட்டம்—ப்ரோஸ் காந்தி சட்டம் வந்தது மாதிரி கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். இப்போது 45-வது அமென்ட்மென்ட், நாம் இங்கே அப்ரூவ் செய்து பாஸ் செய்து இருக்கிறோம். அந்த அமென்ட் மென்டில் ஸ்பெஷலாக 361 கிளாஸ் புதிதாக சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்பட்டாகிவிட்டது. அந்தக் கிளாஸ் சொல்வது—

No person shall be liable to any proceedings, civil or criminal in any court in respect of the publication in a newspaper of a substantialy true report of any proceedings of either House of Parliament or the Legislative Assembly or as the case may be, either House of the Legislature of a State unless the publication is proved to have been made with malice.

ஆகவே, பரோஸ் காந்தி ஆக்ட் இப்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலேயே குறிப்பிடப்பட்டு இருக்கிறது....... "True report"

திரு. ரா. உமாநாத் : True! True! Fairly true report அது இங்கேயும் அப்ளிகபிள். முந்திமாதிரி இங்கே தனிச் சட்டம் தேவையில்லை. பாரளுமன்றத்தில் தனிச்சட்டம் தேவையில்லை என்று சொல்லிதான்— பார்லிமென்ட்— அசெம்பிளி— இரண்டையும் கவர் செய்யும் வகையில் ப்ரீடம் ஹேஸ் பீன் கிவன். அது உங்களுடைய தீர்ப்பு மூலமாக பாதிக்கக் கூடாது.

They are on par with Parliament

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிச்சயம் பாதிக்காது. True report என்றால் Fairly True report என்றால் நிச்சயமாக பத்திரிகைகளுக்கு பாதகமாக இல்லாமல் அனுகூலமாக இருக்கும்.

5. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்பமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: கீழ்க்கண்ட சட்ட முன் வடிவுகள் சட்டமன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 25/1979)

2. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 30/1979)

3. தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 5) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு) எண். 31/1979)

மேலும் தமிழ்நாடு சட்டமன்றமேலவையில், தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 26/1979) திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டதாகவும் மாண்புமிகு மேலவைத் தலைவரிமிடருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.